ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பெரிய திருமடல் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பெரிய திருமடல் ॥

*பிள்ளைத் திருநறையூர் அரையர் அருளிச்செய்தது*

*பொன்னுலகில் வானவரும் பூமகளும் போற்றிசெய்யும்⋆
நன்னுதலீர்! நம்பி நறையூரர்⋆-மன்னுலகில்
என்னிலைமை கண்டும் இரங்காரே யாமாகில்⋆
மன்னு மடலூர்வன் வந்து*

*‡மன்னிய பல் பொறி சேர் ஆயிர வாய் வாள் அரவின்⋆
சென்னி மணிக் குடுமித் தெய்வச் சுடர் நடுவுள்⋆ (1)
மன்னிய நாகத்தணைமேல் ஓர் மாமலை போல்⋆
மின்னும் மணி மகர குண்டலங்கள் வில் வீச⋆ (2)
துன்னிய தாரகையின் பேர் ஒளி சேர் ஆகாசம்⋆
என்னும் விதானத்தின் கீழால்⊕ இரு சுடரை (3)
மின்னும் விளக்காக ஏற்றி⋆ மறி கடலும்
பன்னு திரைக் கவரி வீச⋆ நிலமங்கை (4)
தன்னை முன நாள் அளவிட்ட தாமரை போல்⋆
மன்னிய சேவடியை வான் இயங்கு தாரகை மீன்⋆ (5)
என்னும் மலர்ப் பிணையல் ஏய்ந்த⊕ மழைக் கூந்தல்
தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வடமலையும்⋆ (6)
என்னும் இவையே முலையா வடிவமைந்த⋆
அன்ன நடைய அணங்கே⊕ அடியிணையைத் (7)
தன்னுடைய அங்கைகளால் தான் தடவத் தான் கிடந்து⋆ ஓர்
உன்னிய யோகத்துறக்கம் தலைக்கொண்ட (8)
பின்னை⋆ தன் நாபி வலயத்துப் பேர் ஒளி சேர்⋆
மன்னிய தாமரை மாமலர் பூத்து⋆ அம்மலர்மேல் (9)
முன்னம் திசைமுகனைத் தான் படைக்க⋆ மற்றவனும்
முன்னம் படைத்தனன் நான்மறைகள்⋆ அம்மறை தான் (10)
மன்னும் அறம் பொருள் இன்பம் வீடென்றுலகில்⋆
நன்னெறி மேம்பட்டன நான்கன்றே⊕ நான்கினிலும் (11)*

பின்னையது பின்னைப் பெயர் தரும் என்பது⋆ ஓர்
தொன்னெறியை வேண்டுவார் வீழ் கனியும் ஊழிலையும்⋆ (12)
என்னும் இவையே நுகர்ந்துடலம் தாம் வருந்தி⋆
துன்னும் இலைக் குரம்பைத் துஞ்சியும்⊕ வெஞ்சுடரோன் (13)
மன்னும் அழல் நுகர்ந்தும் வண் தடத்தினுள் கிடந்தும்⋆
இன்னதோர் தன்மையராய் ஈங்குடலம் விட்டெழுந்து⋆ (14)
தொன்னெறிக்கண் சென்றார் எனப்படும் சொல் அல்லால்⋆
இன்னதோர் காலத்தினை யார் இது பெற்றார்⋆ (15)
என்னவும் கேட்டறிவதில்லை⊕ உளதென்னில்
மன்னும் கடுங்கதிரோன் மண்டலத்தின் நன்னடுவுள்⋆ (16)
அன்னதோர் இல்லியின் ஊடு போய்⊕ வீடென்னும்
தொன்னெறிக்கண் சென்றாரைச் சொல்லுமின்கள் சொல்லாதே⋆ (17)
அன்னதே பேசும் அறிவில் சிறுமனத்து⋆ ஆங்-
கன்னவரைக் கற்பிப்போம் யாமே⋆ அதுநிற்க (18)
முன்னம் நான் சொன்ன அறத்தின் வழி முயன்ற⋆
அன்னவர் தாம் கண்டீர்கள் ஆயிரக் கண் வானவர் கோன்⋆ (19)
பொன்னகரம் புக்கமரர் போற்றிசைப்ப⋆ பொங்கொளி சேர்
கொன்னவிலும் கோள் அரிமாத் தான் சுமந்த கோலம் சேர்⋆ (20)
மன்னிய சிங்காசனத்தின் மேல்⊕ வாணெடுங்கண்
கன்னியரால் இட்ட கவரிப் பொதி அவிழ்ந்து⋆ ஆங்- (21)
கின்னிளம் பூந்தென்றல் இயங்க மருங்கிருந்த⋆
மின்னனைய நுண் மருங்குல் மெல்லியலார் வெண்முறுவல்⋆ (22)
முன்னம் முகிழ்த்த முகிழ் நிலா வந்தரும்ப⋆
அன்னவர் தம் மானோக்கம் உண்டாங்கணிமலர் சேர்⋆ (23)
பொன்னியல் கற்பகத்தின் காடுடுத்த மாடெல்லாம்⋆
மன்னிய மந்தாரம் பூத்த மதுத்திவலை⋆ (24)
இன்னிசை வண்டமரும் சோலைவாய் மாலை சேர்⋆
மன்னிய மாமயில் போல் கூந்தல்⊕ மழைத்தடங்கண் (25)
மின்னிடை யாரோடும் விளையாடி வேண்டிடத்து⋆
மன்னும் மணித் தலத்து மாணிக்க மஞ்சரியின்⋆ (26)
மின்னின் ஒளி சேர் பளிங்கு விளிம்படுத்த⋆
மன்னும் பவளக் கால் செம் பொன் செய் மண்டபத்துள்⋆ (27)

அன்ன நடைய அரம்பயர் தம் கைவளர்த்த⋆
இன்னிசையாழ் பாடல் கேட்டின்புற்று⊕ இருவிசும்பில் (28)
மன்னும் மழை தவழும் வாணிலா நீண்மதி தோய்⋆
மின்னின் ஒளி சேர் விசும்பூரும் மாளிகைமேல்⋆ (29)
மன்னும் மணி விளக்கை மாட்டி⊕ மழைக் கண்ணார்
பன்னு விசித்திரமாப் பாப்படுத்த பள்ளிமேல்⋆ (30)
துன்னிய சாலேகம் சூழ் கதவம் தாள் திறப்ப⋆
அன்னம் உழக்க நெறிந்துக்க வாள் நீலச்⋆ (31)
சின்ன நறுந்தாது சூடி⊕ ஓர் மந்தாரம்
துன்னும் நறுமலரால் தோள் கொட்டி⋆ கற்பகத்தின் (32)
மன்னு மலர்வாய் மணி வண்டு பின் தொடர⋆
இன்னிளம் பூந்தென்றல் புகுந்து ஈங்கிள முலைமேல்⋆ (33)
நன்னறும் சந்தனச் சேறுலர்த்த⊕ தாங்கருஞ்சீர்
மின்னிடைமேல் கைவைத்திருந்தேந்திள முலைமேல்⋆ (34)
பொன்னரும்பாரம் புலம்ப⊕ அகங்குழைந்தாங்-
கின்ன உருவின் இமையாத் தடங்கண்ணார்⋆ (35)
அன்னவர் தம் மானோக்கம் உண்டாங்கணி முறுவல்⋆
இன்னமுதம் மாந்தி இருப்பர்⊕ இதுவன்றே (36)
அன்ன அறத்தின் பயன் ஆவது⋆ ஒண் பொருளும்
அன்ன திறத்ததே ஆதலால்⋆ காமத்தின் (37)
மன்னும் வழிமுறையே நிற்றும் நாம் மானோக்கின்⋆
அன்ன நடையார் அலரேச ஆடவர்மேல்⋆ (38)
மன்னும் மடல் ஊரார் என்பதோர் வாசகமும்⋆
தென்னுரையில் கேட்டறிவதுண்டு⊕ அதனை யாம் தெளியோம் (39)
மன்னும் வட நெறியே வேண்டினோம்⋆ வேண்டாதார்
தென்னன் பொதியில் செழுஞ்சந்தனக் குழம்பின்⋆ (40)
அன்னதோர் தன்மை அறியாதார்⋆ ஆயன் வேய்
இன்னிசை ஓசைக்கிரங்காதார்⋆ மால் விடையின் (41)
மன்னும் மணி புலம்ப வாடாதார்⋆ பெண்ணைமேல்
பின்னும் அவ்வன்றில் பெடை வாய்ச் சிறு குரலுக்கு⋆ (42)
உன்னி உடலுருகி நையாதார்⊕ உம்பர்வாய்த்
துன்னு மதியுகுத்த தூ நிலா நீள் நெருப்பில்⋆ (43)

தம்முடலம் வேவத் தளராதார்⊕ காமவேள்
மன்னும் சிலைவாய் மலர் வாளி கோத்தெய்ய⋆ (44)
பொன்னெடு வீதி புகாதார்⊕ தம் பூவணைமேல்
சின்ன மலர்க் குழலும் அல்குலும் மென் முலையும்⋆ (45)
இன்னிள வாடை தடவத்தாம் கண்டுயிலும்⋆
பொன்னனையார் பின்னும் திருவுறுக⋆ போர் வேந்தன் (46)
தன்னுடைய தாதை பணியால் அரசொழிந்து⋆
பொன்னகரம் பின்னே புலம்ப வலங்கொண்டு⋆ (47)
மன்னும் வளநாடு கைவிட்டு⋆ மாதிரங்கள்
மின்னுருவில் விண் தேர் திரிந்து வெளிப்பட்டு⋆ (48)
கன்னிறைந்து தீய்ந்து கழையுடைந்து கால் சுழன்று⋆
பின்னும் திரை வயிற்றுப் பேயே திரிந்துலவா⋆ (49)
கொன்னவிலும் வெங்கானத்தூடு⋆ கொடுங்கதிரோன்
துன்னு வெயில் வறுத்த வெம்பரமேல் பஞ்சடியால்⋆ (50)
மன்னன் இராமன் பின் வைதேகி என்றுரைக்கும்⋆
அன்ன நடைய அணங்கு நடந்திலளே⋆ (51)
பின்னும் கரு நெடுங்கண் செவ்வாய்ப் பிணை நோக்கின்⋆
மின்னனைய நுண் மருங்குல் வேகவதி என்றுரைக்கும் (52)
கன்னி⋆ தன் இன்னுயிராம் காதலனைக் காணாது⋆
தன்னுடைய முன் தோன்றல் கொண்டேகத் தான் சென்று⋆ அங்- (53)
கன்னவனை நோக்காதழித்துரப்பி⋆ வாளமருள்
கன்னவில் தோள் காளையைக் கைப்பிடித்து மீண்டும் போய்⋆ (54)
பொன்னவிலும் ஆகம் புணர்ந்திலளே⊕ பூங்கங்கை
முன்னம் புனல் பரக்கும் நன்னாடன் மின்னாடும்⋆ (55)
கொன்னவிலும் நீள் வேல் குருக்கள் குல மதலை⋆
தன்னிகர் ஒன்றில்லாத வென்றித் தனஞ்சயனை⋆ (56)
பன்னாகராயன் மடப் பாவை⊕ பாவை தன்
மன்னிய நாண் அச்சம் மடம் என்றிவை அகல⋆ (57)
தன்னுடைய கொங்கை முகம் நெரிய⋆ தான் அவன் தன்
பொன்வரை ஆகம் தழீ இக்கொண்டு போய்⋆ தனது (58)
நன்னகரம் புக்கு நயந்தினிது வாழ்ந்ததுவும்⋆
முன்னுரையில் கேட்டறிவதில்லையே⊕ சூழ் கடலுள் (59)

பொன்னகரம் செற்ற புரந்தரனோடேரொக்கும்⋆
மன்னவன் வாணன் அவுணர்க்கு வாள் வேந்தன்⋆ (60)
தன்னுடைய பாவை உலகத்துத் தன்னொக்கும்⋆
கன்னியரை இல்லாத காட்சியாள்⊕ தன்னுடைய (61)
இன்னுயிர்த் தோழியால் எம்பெருமான் ஈன் துழாய்⋆
மன்னும் மணி வரைத்தோள் மாயவன்⋆ பாவியேன் (62)
என்னை இதுவிளைத்த ஈர் இரண்டு மால் வரைத்தோள்⋆
மன்னவன் தன் காதலனை மாயத்தால் கொண்டு போய்⋆ (63)
கன்னி தன்பால் வைக்க மற்றவனோடெத்தனையோ⋆
மன்னிய பேரின்பம் எய்தினாள்⊕ மற்றிவை தான் (64)
என்னாலே கேட்டீரே ஏழைகாள் என்னுரைக்கேன்⋆
மன்னும் மலையரயன் பொற்பாவை⊕ வாணிலா (65)
மின்னும் மணி முறுவல் செவ்வாய் உமையென்னும்⋆
அன்னநடைய அணங்கு நுடங்கிடை சேர்⋆ (66)
பொன்னுடம்பு வாடப் புலனைந்தும் நொந்தகல⋆
தன்னுடைய கூழைச் சடாபாரம் தான் தரித்து⋆ ஆங்- (67)
கன்ன அருந்தவத்தின் ஊடுபோய்⋆ ஆயிரந்தோள்
மன்னு கரதலங்கள் மட்டித்து⋆ மாதிரங்கள் (68)
மின்னி எரி வீச மேல் எடுத்த சூழ் கழற்கால்⋆
பொன்னுலகம் ஏழும் கடந்தும்பர் மேல் சிலும்ப⋆ (69)
மன்னு குல வரையும் மாருதமும் தாரகையும்⋆
தன்னின் உடனே சுழலச் சுழன்றாடும்⋆ (70)
கொன்னவிலும் மூவிலைவேல் கூத்தன் பொடியாடி⋆
அன்னவன் தன் பொன்னகலம் சென்றாங்கணைந்திலளே⋆ (71)
பன்னி உரைக்குங்கால் பாரதமாம்⊕ பாவியேற்கு
என்னுறு நோய் யான் உரைப்பக் கேண்மின்⋆ இரும் பொழில் சூழ் (72)
மன்னு மறையோர் திருநறையூர் மாமலை போல்⋆
பொன்னியலும் மாடக் கவாடம் கடந்து புக்கு⋆ (73)
என்னுடைய கண்களிப்ப நோக்கினேன்⊕ நோக்குதலும்
மன்னன் திருமார்பும் வாயும் அடியிணையும்⋆ (74)
பன்னு கரதலமும் கண்களும்⋆ பங்கயத்தின்
பொன்னியல் காடோர் மணிவரைமேல் பூத்ததுபோல்⋆ (75)

மின்னி ஒளி படைப்ப வீழ் நாணும் தோள் வளையும்⋆
மன்னிய குண்டலமும் ஆரமும் நீண்முடியும்⋆ (76)
துன்னு வெயில் விரித்த சூளாமணி இமைப்ப⋆
மன்னும் மரதகக் குன்றின் மருங்கே⊕ ஓர் (77)
இன்னிள வஞ்சிக்கொடி ஒன்று நின்றதுதான்⋆
அன்னமாய் மானாய் அணிமயிலாய் ஆங்கிடையே⋆ (78)
மின்னாய் இளவேய் இரண்டாய் இணைச் செப்பாய்⋆
முன்னாய தொண்டையாய்க் கெண்டைக் குலம் இரண்டாய்⋆ (79)
அன்ன திருவுருவம் நின்றதறியாதே⋆
என்னுடைய நெஞ்சும் அறிவும் இன வளையும்⋆ (80)
பொன்னியலும் மேகலையும் ஆங்கொழியப் போந்தேற்கு⋆
மன்னும் மறி கடலும் ஆர்க்கும்⊕ மதியுகுத்த (81)
இன்னிலாவின் கதிரும் என்தனக்கேவெய்தாகும்⋆
தன்னுடைய தன்மை தவிரத் தான் என்கொலோ⋆ (82)
தென்னன் பொதியில் செழுஞ்சந்தின் தாதளைந்து⋆
மன்னிவ்வுலகை மனங்களிப்ப வந்தியங்கும்⋆ (83)
இன்னிளம் பூந்தென்றலும் வீசும் எரியெனக்கே⋆
முன்னிய பெண்ணைமேல் முள்முளரிக் கூட்டகத்து⋆ (84)
பின்னும் அவ்வன்றில் பெடை வாய்ச் சிறு குரலும்⋆
என்னுடைய நெஞ்சுக்கோர் ஈர் வாளாம் என் செய்கேன்⋆ (85)
கன்னவில் தோள் காமன் கருப்புச் சிலை வளைய⋆
கொன்னவிலும் பூங்கணைகள் கோத்துப் பொதவணைந்து⋆ (86)
தன்னுடைய தோள் கழிய வாங்கி⊕ தமியேன்மேல்
என்னுடைய நெஞ்சே இலக்காக எய்கின்றான்⋆ (87)
பின்னிதனைக் காப்பீர் தாம் இல்லையே⊕ பேதையேன்
கன்னவிலும் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின்⋆ (88)
நன்னறு வாசம் மற்றாரானும் எய்தாமே⋆
மன்னும் வறுநிலத்து வாளாங்குகுத்தது போல்⋆ (89)
என்னுடைய பெண்மையும் என் நலனும் என் முலையும்⋆
மன்னு மலர்மங்கை மைந்தன்⊕ கணபுரத்துப் (90)
பொன்மலை போல் நின்றவன் தன் பொன்னகலம் தோயாவேல்⋆
என்னிவை தான் வாளா எனக்கே பொறையாகி⋆ (91)

முன்னிருந்து மூக்கின்று மூவாமைக் காப்பதோர்⋆
மன்னும் மருந்தறிவீர் இல்லையே⊕ மால்விடையின் (92)
துன்னு பிடரெருத்துத் தூக்குண்டு வன் தொடரால்⋆
கன்னியர் கண்மிளிரக் கட்டுண்டு⋆ மாலைவாய் (93)
தன்னுடைய நாவொழியாதாடும் தனி மணியின்⋆
இன்னிசை ஓசையும் வந்தென் செவி தனக்கே⋆ (94)
கொன்னவிலும் எஃகில் கொடிதாய் நொடிதாகும்⋆
என்னிதனைக் காக்குமா சொல்லீர்⊕ இதுவிளைத்த (95)
மன்னன் நறுந்துழாய் வாழ் மார்பன்⋆ மாமதிகோள்
முன்னம் விடுத்த முகில் வண்ணன்⋆ காயாவின் (96)
சின்ன நறும் பூந்திகழ் வண்ணன்⋆ வண்ணம் போல்
அன்ன கடலை மலையிட்டணைகட்டி⋆ (97)
மன்னன் இராவணனை மாமண்டு வெஞ்சமத்து⋆
பொன் முடிகள் பத்தும் புரளச் சரந்துரந்து⋆ (98)
தென்னுலகம் ஏற்றுவித்த சேவகனை⊕ ஆயிரக்கண்
மன்னவன் வானமும் வானவர் தம் பொன்னுலகும்⋆ (99)
தன்னுடைய தோள் வலியால் கைக்கொண்ட தானவனை⋆
பின்னோர் அரியுருவமாகி எரிவிழித்து⋆ (100)
கொன்னவிலும் வெஞ்சமத்துக் கொல்லாதே⋆ வல்லாளன்
மன்னும் மணிக்குஞ்சி பற்றி வர வீர்த்து⋆ (101)
தன்னுடைய தாள்மேல் கிடாத்தி⋆ அவனுடைய
பொன்னகலம் வள்ளுகிரால் போழ்ந்து புகழ் படைத்த⋆ (102)
மின்னலங்கும் ஆழிப் படைத் தடக்கை வீரனை⋆
மன்னிவ்வகலிடத்தை மாமுது நீர் தான் விழுங்க⋆ (103)
பின்னுமோர் ஏனமாய் புக்கு வளை மருப்பில்⋆
கொன்னவிலும் கூர்நுதிமேல் வைத்தெடுத்த கூத்தனை⋆ (104)
மன்னும் வட மலையை மத்தாக மாசுணத்தால்⋆
மின்னும் இருசுடரும் விண்ணும் பிறங்கொளியும்⋆ (105)
தன்னின் உடனே சுழல மலை திரித்து⋆ ஆங்கு
இன்னமுதம் வானவரை ஊட்டி⋆ அவருடைய (106)
மன்னும் துயர் கடிந்த வள்ளலை⋆ மற்றன்றியும்
தன்னுருவம் ஆரும் அறியாமல் தான் அங்கோர்⋆ (107)

மன்னும் குறள் உருவில் மாணியாய்⊕ மாவலி தன்
பொன்னியலும் வேள்விக்கண் புக்கிருந்து⋆ போர்வேந்தர் (108)
மன்னை மனங்கொள்ள வஞ்சித்து நெஞ்சுருக்கி⋆
என்னுடைய பாதத்தால் யான் அளப்ப மூவடி மண்⋆ (109)
மன்னா! தருகென்று வாய் திறப்ப⋆ மற்றவனும்
என்னால் தரப்பட்டதென்றலுமே⋆ அத்துணைக்கண் (110)
மின்னார் மணிமுடி போய் விண் தடவ⋆ மேலெடுத்த
பொன்னார் கனை கழற்கால் ஏழுலகும் போய்க்கடந்து⋆ அங்- (111)
கொன்னா அசுரர் துளங்கச் செல நீட்டி⋆
மன்னிவ்வகலிடத்தை மாவலியை வஞ்சித்து⋆ (112)
தன்னுலகம் ஆக்குவித்த தாளானை⊕ தாமரைமேல்
மின்னிடையாள் நாயகனை விண்ணகருள் பொன் மலையை⋆ (113)
பொன்னி மணி கொழிக்கும் பூங்குடந்தைப் போர் விடையை⋆
தென்னன் குறுங்குடியுள் செம் பவளக் குன்றினை⋆ (114)
மன்னிய தண் சேறை வள்ளலை⋆ மாமலர்மேல்
அன்னம் துயிலும் அணி நீர் வயலாலி⋆ (115)
‡என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெரு மலையை⋆
கன்னி மதிள் சூழ் கணமங்கைக் கற்பகத்தை⋆ (116)
மின்னை இருசுடரை வெள்ளறையுள் கல்லறைமேல்
பொன்னை⋆ மரதகத்தைப் புட்குழி எம் போரேற்றை⋆ (117)
‡மன்னும் அரங்கத்தெம் மாமணியை⊕ வல்லவாழ்
பின்னை மணாளனைப் பேரில் பிறப்பிலியை⋆ (118)
தொன்னீர்க் கடல் கிடந்த தோளா மணிச் சுடரை⋆
என்மனத்து மாலை இடவெந்தை ஈசனை⋆ (119)
மன்னும் கடன்மல்லை மாயவனை⊕ வானவர் தம்
சென்னி மணிச் சுடரைத் தண்கால் திறல் வலியை⋆ (120)
தன்னைப் பிறரறியாத் தத்துவத்தை முத்தினை⋆
அன்னத்தை மீனை அரியை அருமறையை⋆ (121)
முன்னிவ்வுலகுண்ட மூர்த்தியை⋆ கோவலூர்
மன்னும் இடைகழி எம் மாயவனை⋆ பேயலறப் (122)
பின்னும் முலையுண்ட பிள்ளையை⋆ அள்ளல்வாய்
அன்னம் இரை தேர் அழுந்தூர் எழும் சுடரை⋆ (123)

‡தென் தில்லைச் சித்திரகூடத்தென் செல்வனை⋆
மின்னி மழை தவழும் வேங்கடத்தெம் வித்தகனை⋆ (124)
மன்னனை மாலிருஞ்சோலை மணாளனை⋆
கொன்னவிலும் ஆழிப் படையானை⋆ கோட்டியூர் (125)
அன்னவுருவின் அரியை⋆ திருமெய்யத்து
இன்னமுத வெள்ளத்தை இந்தளூர் அந்தணனை⋆ (126)
மன்னும் மதிட்கச்சி வேளுக்கை ஆளரியை⋆
மன்னிய பாடகத்தெம் மைந்தனை⋆ வெஃகாவில் (127)
உன்னிய யோகத்துறக்கத்தை⋆ ஊரகத்துள்
அன்னவனை அட்ட புயகரத்தெம் ஆனேற்றை⋆ (128)
என்னை மனங்கவர்ந்த ஈசனை⊕ வானவர் தம்
முன்னவனை மூழிக்களத்து விளக்கினை⋆ (129)
அன்னவனை ஆதனூர் ஆண்டளக்கும் ஐயனை⋆
நென்னலை இன்றினை நாளையை⋆ நீர்மலைமேல் (130)
மன்னும் மறை நான்கும் ஆனானை⋆ புல்லாணித்
தென்னன் தமிழை வடமொழியை⋆ நாங்கூரில் (131)
மன்னும் மணிமாடக் கோயில் மணாளனை⋆
நன்னீர்த் தலைச்சங்க நாண்மதியை⋆ நான் வணங்கும் (132)
கண்ணனைக் கண்ணபுரத்தானை⋆ தென்னறையூர்
மன்னும் மணிமாடக் கோயில் மணாளனை⋆ (133)
கன்னவில் தோள் காளையைக் கண்டாங்குக் கை தொழுது⋆
என்னிலைமை எல்லாம் அறிவித்தால் எம்பெருமான்⋆ (134)
தன்னருளும் ஆகமும் தாரானேல்⋆ தன்னை நான்
மின்னிடையார் சேரியிலும் வேதியர்கள் வாழ்விடத்தும்⋆ (135)
தன்னடியார் முன்பும் தரணி முழுதாளும்⋆
கொன்னவிலும் வேல் வேந்தர் கூட்டத்தும் நாட்டகத்தும்⋆ (136)
தன்னிலைமை எல்லாம் அறிவிப்பன்⋆ தான் முன நாள்
மின்னிடை ஆய்ச்சியர் தம் சேரிக் களவின்கண்⋆ (137)
துன்னு படல் திறந்து புக்கு⊕ தயிர் வெண்ணெய்
தன் வயிறார விழுங்க⋆ கொழுங்கயல் கண் (138)
மன்னும் மடவோர்கள் பற்றியோர் வான் கயிற்றால்⋆
பின்னும் உரலோடு கட்டுண்ட பெற்றிமையும்⋆ (139)

அன்னதோர் பூதமாய் ஆயர் விழவின் கண்⋆
துன்னு சகடத்தால் புக்க பெருஞ்சோற்றை⋆ (140)
முன்னிருந்து முற்றத் தான் துற்றிய தெற்றெனவும்⋆
மன்னர் பெருஞ்சவையுள் வாழ் வேந்தர் தூதனாய்⋆ (141)
தன்னை இகழ்ந்துரைப்பத் தான் முன நாள் சென்றதுவும்⋆
மன்னு பறைகறங்க மங்கையர் தம் கண்களிப்ப⋆ (142)
கொன்னவிலும் கூத்தனாய்ப் பேர்த்தும் குடம் ஆடி⋆
என்னிவன் என்னப் படுகின்ற ஈடறவும்⋆ (143)
தென்னிலங்கை ஆட்டி அரக்கர் குலப் பாவை⋆
மன்னன் இராவணன் தன் நல் தங்கை⊕ வாள் எயிற்றுத் (144)
துன்னு சுடு சினத்துச் சூர்பணகா சோர்வெய்தி⋆
பொன்னிறங்கொண்டு புலர்ந்தெழுந்த காமத்தால்⋆ (145)
தன்னை நயந்தாளைத் தான் முனிந்து மூக்கரிந்து⋆
மன்னிய திண்ணெனவும் வாய்த்த மலை போலும்⋆ (146)
தன்னிகர் ஒன்றில்லாத தாடகையை⊕ ‡மாமுனிக்காத்
தென்னுலகம் ஏற்றுவித்த திண் திறலும்⋆ மற்றிவைதான் (147)
உன்னி உலவா உலகறிய ஊர்வன் நான்⋆
முன்னி முளைத்தெழுந்தோங்கி ஒளி பரந்த⋆ (148)
மன்னிய பூம் பெண்ணை மடல்⊕

என்னிலைமை எல்லாம் அறிவித்தால் எம்பெருமான்⋆
    தன்னருளும் ஆகமும் தாரானேல் - பின்னைப் போய்
ஒண்டுறைநீர் வேலை உலகறிய ஊர்வன் நான்⋆
    வண்டறை பூம் பெண்ணை மடல்⊕

மண்ணிற்பொடி பூசி வண்டிரைக்கும் பூச்சூடி⋆
    பெண்ணை மடல் பிடித்துப் பின்பின்னே - அண்ணல்
திரு நறையூர் நின்ற பிரான் தேர் போகும் வீதி⋆
    பொருமறையாச் செல்வம் பொலிந்து⊕

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥